பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 12 2025 WEDNESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. உலக *Blitz* செஸ் சாம்பியன் போட்டியில், வெண்கலப்பதக்கம் வென்ற இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. நடப்பாண்டில் முக்கிய சீர்திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. CBSE 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான தேதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

4. தெற்கு ரயில்வேயின் புதிய கால அட்டவணை நாளை முதல் அமலுக்கு வருகிறது

5. அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் *Vidhi Jani - Saily Thakkar* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<<

தோஹாவில் நடைபெற்ற உலக *Blitz* செஸ் சாம்பியன் போட்டியில், வெண்கலப்பதக்கம் வென்ற இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திறமை, பொறுமை மற்றும் ஆர்வத்துடன் சிறப்பான ஆட்டத்தை அர்ஜுன் எரிகைஸி வெளிப்படுத்தியதாக கூறியுள்ளார்.

அவரது வெற்றி இளைஞர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<<

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பயணத்தில், நடப்பாண்டில் முக்கிய சீர்திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று Bharat@2026 என்ற பெயரில் மத்திய அரசின் வரும் ஆண்டுக்கான புதிய காலண்டரை வெளியிட்டு பேசினார்.*

*இந்த சீர்திருத்தங்கள் மூலம், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் வலுப்பெற்றிருப்பதாகவும், உள்ளார்ந்த வளர்ச்சி உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*நீண்டகால வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு, சீர்திருத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.*

*இந்நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ, கூடுதல் செயலர் திரு. பிரபாத், பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தலைமை இயக்குநர் திருமதி. அனுபமா பட்நாகர், மத்திய மக்கள் தொடர்பகத்தின் தலைமை இயக்குநர் திருமதி. காஞ்சன் பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*>>>>><<<<<*

*சிக்கிமில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் ஆய்வு மேற்கொண்டார்.*

*Soreng மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளின் தற்போதைய நிலவரம் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு. தீரஜ் சுபேதி உள்ளிட்ட அதிகாரிகள் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.*

திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தியதற்காக, வளர்ச்சிக்கான மாவட்டம் மற்றும் வட்டார திட்டங்களில் *Soreng* மாவட்டம் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை பெற்றுள்ளதையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இம்மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு நவீன மருத்துவ வசதிகள் கிடைப்பதற்கு தேவையான வசதிகளை மத்திய அரசு வழங்கும் என்று திரு. ஜார்ஜ் குரியன் உறுதி அளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கான கால அட்டவணை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் முடிவு குறித்து, பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. நவ்தீப் ரின்வா, ஜனவரி 6ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, கோரிக்கை மற்றும் ஆட்சேபம் குறித்த மனுக்கள் பெறப்படும் என்று கூறினார்.

இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் திரு. நவ்தீப் ரின்வா தெரிவித்தார்.

இதுவரை சேரிக்கப்பட்ட கண்க்கீட்டுப் படிவங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, உத்தரபிரதேச மாநிலத்திற்கான வரைவு வாக்காளர்பட்டியல் இன்று வெளியிடப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

>>>>><<<<<

தெற்கு ரயில்வேயின் புதிய கால அட்டவணை நாளை முதல் அமலுக்கு வருகிறது.

இதன்படி, சென்னை சென்ட்ரல், ராமேஸ்வரம் மற்றும் புதுச்சேரியிலிருந்து புவனேஷ்வர் செல்லும் ரயில்களின் எண்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

சென்னை சென்ட்ரல் – மைசூர் எக்ஸ்பிரஸ், Hubballi வாராந்திர எக்ஸ்பிரஸ் மற்றும் பல்வேறு பயணியர் ரயில்களின் எண்களும் மாற்றப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் – போடிநாயக்கனூர் எக்ஸ்பிரஸ், நாளை முதல் இருமார்க்கங்களிலும் நாமக்கல்லில் நின்று செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் - சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் பூதலூரிலும்,

தாம்பரம் - செங்கோட்டை எக்ஸ்பிரஸ் சிதம்பரத்திலும்,

சென்னை எழும்பூர் - காரைக்குடி பல்லவன் எக்ஸ்பிரஸ் பெண்ணாடத்திலும்,

தூத்துக்குடி - பாலக்காடு எக்ஸ்பிரஸ் கல்லிடைக்குறிச்சியிலும்,

ராமேஸ்வரம் - பனாரஸ் எக்ஸ்பிரஸ் புதுக்கோட்டையிலும் நின்று செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பல்வேறு ரயில்களின் வேகமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வருமான வரி நிரந்தரக் கணக்கு எண்ணான - PAN எண்ணுடன், ஆதார் எண்ணை இணைப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

*இந்த இணைப்பை மேற்கொள்ளாதவர்களின் பான் அட்டை நாளை முதல் செல்லாது என்பதுடன், வருமான வரி கணக்கும் தாக்கல் செய்ய முடியாது என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.*

*இணைப்பை மேற்கொள்ளும் வரை, ஏற்கனவே பிடித்தம் செய்யப்பட்ட தொகையை திரும்ப பெற இயலாது என்றும் கூறப்பட்டுள்ளது.*

*பான் எண்ணைப் புதுப்பிக்க ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் என்றும் அந்த வாரியம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*மத்திய கல்வி வாரியம் - CBSE 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான காலஅட்டவணை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் வரும் மார்ச் மாதம் 11ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*12ஆம் வகுப்புக்கான பொதுத்தேர்வுகள் ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி தொடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நிர்வாக காரணங்களுக்கான இந்த கால அட்டவணை மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக CBSE தெரிவித்துள்ளது.*

*இந்த தகவலை பள்ளிகள், மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் உடனடியாக தெரிவிக்குமாறும் மத்திய கல்வி வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.*

*>>>>><<<<<*

*மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இந்த புதிய திட்டத்தின் மூலம் வேலை நாட்கள் 125ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதும், 7 நாட்களிலேயே பணியாளர்களுக்கான ஊதியம் தாமதமின்றி கிடைப்பதும் தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் அசுத்தமான குடிநீரை அருந்தியதால், உயிரிழந்தோர் எண்ணிக்கை 8-ஆக அதிகரித்துள்ளது.*

*இந்தூரின் பகிரத்புரம் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக, மாநகராட்சி அதிகாரிகள் இருவரும், பொறியாளர் ஒருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

*>>>>><<<<<*

*வடமாநிலங்களில் நிலவும் கடுமையான பனிமூட்டம் காரணமாக, இன்றும் ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டுள்ளது.*

*இதுதொடர்பாக தில்லி ரயில்வே கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தில்லிக்கு வரும் மற்றும் புறப்படும் 50க்கும் மேற்பட்ட ரயில்கள் காலதாமதமாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மோசமான வானிலை காரணமாக, 148 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தில்லி விமான நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கடுமையான பனிமூட்டம் காரணமாக, 78 விமானங்களின் வருகை மற்றும் 70 விமானங்களின் புறப்பாடு ரத்து செய்யப்பட்டுள்ளன.*

*விமானங்கள் தாமதம் மற்றும் ரத்து செய்யப்படுவதால் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களை களைவதற்கு விதிமுறைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.*

*பயணிகளை மாற்று விமானங்களில் அனுப்புவது. ரத்து செய்யப்பட்ட சேவைகளுக்கு முழுமையான கட்டணத்தை திருப்பி வழங்குவது போன்ற பணிகளை காலதாமதமின்றி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.*

*>>>>><<<<<*

*ஏமன் நாட்டில் உள்ள தங்களின் அனைத்து தீவிரவாத தடுப்புக் குழுக்களும் திரும்ப பெறப்படும் என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்துள்ளது.*

*ஐக்கிய அரபு எமிரேட்ஸ் – ஏமன் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் அடிப்படையில், கடந்த 2019ஆம் ஆண்டு ஏமனில் சிறப்பு தீவிரவாத குழுக்களை ஐக்கிய அரபு எமிரேஸ்ட் அமைத்திருந்தது.*

*ஏமன் நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை தங்களின் ராணுவ வீரர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லாத வகையில் இருப்பதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*அஹமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Vidhi Jani - Saily Thakkar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-2 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Yuka Matsumoto - இந்தியாவின் Mirudhula Palanivel இணையை வென்றது.*

*>>>>><<<<<*

*விஜய் அஸாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஜார்க்கண்ட் அணிக்கு எதிராக முதலில் பேட் செய்து வரும் தமிழக அணி சற்றுமுன்வரை 25 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 129 ரன் எடுத்துள்ளது.*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஜார்க்கண்ட் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.*

*>>>>><<<<<*